செய்தி வெளியீடு எண்: 953 நாள்: 27.12.2018

## செய்தி வெளியீடு

## தொழிலாளர் துறையினால் கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு தமிழகம் முழுவதும் மேற்கொள்ளப்பட்ட சிறப்பாய்வு

சட்ட முறை எடையளவு சட்டம் தொழிலாளர் துறையின் அமலாக்க அதிகாரிகளின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த சட்டத்தின் மூலம் அன்றாட வாழ்வில் நுகர்வோர்களின் நலன் பாதுகாப்பட்டுவருகிறது. சட்டமுறை எடையளவு சட்டம் மற்றும் பொட்டலப் பொருட்கள் விதிகளின் கீழ் மாதந்தோறும் தமிழகத்திலுள்ள அனைத்து கடைகள் மற்றும் வணிக நிறுவனங்களில் சிறப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வகையில் டிசம்பர் மாதம் கிருஸ்துமஸ் பண்டிகையை முன்னிட்டு நகை கடைகளில், சட்ட முறை எடைமுறை சட்டத்தின் கீழும், ஸ்வீட் கடைகள், பேக்கரி, ரெடிமெட்ஸ், சில்க்ஸ், டெக்ஸ்டைல்ஸ் ஆகிய கடைகளில் சட்டமுறை எடையளவு பொட்டலப் பொருள்கள் விதிகளின் கீழும் மாவட்டம் தோறும் உள்ள தொழிலாளர் உதவி ஆணையர்கள் (அமுலாக்கம்) தலைமையில் ஆய்வு மேற்கொள்ள தொழிலாளர் ஆணையர் முனைவர். இரா. நந்த கோபால், இ.ஆ.ப., அவர்களால் ஆணையிடப்பட்டது.

இவ்வகையில் தமிழகத்திலுள்ள ஸ்வீட் கடைகள், பேக்கரி, ரெடிமெட்ஸ், சில்க்ஸ், டெக்ஸ்டைல்ஸ் ஆகிய 1632 நிறுவனங்கள் ஆய்வு செய்யப்பட்டதில், சட்டமுறை எடையளவு (பொட்டலப் பொருள்) விதிகளின்படி பொட்டலமிடுபவர் பெயர், முழு முகவரி, நுகர்வோர் பாதுகாப்பு எண், மின்னஞ்சல் முகவரி, பொருளின் பெயர், பொருளின் நிகர எடை, எண்ணிக்கை, பொட்டலமிடப்பட்ட ஆண்டு, அதிக பட்ச சில்லறை விற்பனை விலை (அனைத்து வரிகளும் உட்பட) ஆகிய சட்ட ரீதியான விவரங்கள் இன்றி பொட்டலப் பொருட்கள் விற்பனை செய்தமைக்கும் பொருளில் குறிப்பிட்ட அதிகபட்ச சில்லரை விற்பனை விலையைவிட அதிகமாக விற்பனை செய்தமைக்கும் 181 கடைகள் மற்றும் நிறுவனங்களில் முரண்பாடுகள் கண்டறியப்பட்டு சம்மந்தப்பட்ட நிறுவனங்கள் மீது சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அபராதம் வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மேலும் சட்ட முறை எடையளவு சட்டத்தின் கீழ் 1176 நகை கடைகளில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில் 389 முரண்பாடுகள் கண்டயறிப்பட்டு சம்மந்தப்பட்ட நிறுவனங்கள் மீது சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அபராதம் வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

நுகர்வோர் / பொதுமக்கள் சட்டமுறை எடையளவு மற்றும் பொட்டல பொருள்கள் மீதான புகார்கள் குறித்து தொழிலாளர் துறையினால் அறிமுகப்படுத்தப்பட்டு பயன்பாட்டில் இருந்து வரும் TN-LMCTS ( Tamil Nadu Legal Metrology Complaint Tracking System) என்ற கைபேசி செயலியை Google Playstore மூலம் பதிவிறக்கம் செய்து அதன் வாயிலாக புகார் அளித்து உரிய நிவாரணம் காணலாம்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**